R4840

# DELIVERANCE FROM THE CURSE
# சாபத்திலிருந்து விடுதலை

"குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்." "தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்." 1 யோவான் 5:12; யோவான் 3:36

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விசுவாசி தனது இருதயத்திலிருந்து விசுவாசிப்பவர். கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்ற உண்மையை அறிவுடன் மதித்தல் அல்ல. "நீதியுண்டாக இருதயத்தில் மனிதன் விசுவாசிக்கிறான்." தேவனுடைய குமாரனை தனது தலைவராக, சரீரத்தின் தலையாக ஒப்புக்கொள்ள அவருடன் உறவுக்குள் வந்திருக்கிறவர் என்று பொருள்படும். "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்." இப்படிப்பட்ட ஒருவனுக்கு தற்காலத்தில் இந்த ஜீவன் சாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலேயே, முழுமையான உணர்வுடன் பெற்றிருக்கவில்லை. அவன் உண்மையுள்ளவனாயிருந்தால் அவன் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும்படி புதிய சுபாவத்திற்கும், வாக்குத்தத்தத்திற்கும் வெறும் ஜெனிப்பித்தலை பெற்றிருக்கிறான். "முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடு கூட ஆயிரம் வருடம் அரசாளுவார்கள். "(வெளிப்படுத்தல் 20:6)

ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே வரக்கூடிய இந்த உயிர்த்தெழுதலின் மாற்றத்தில் உண்மையான உணர்வில் ஜீவனை பெற்றிருப்பார்கள். இப்போது புது சிருஷ்டிகளாக காணப்படுகிறார்கள். மரண தீர்ப்பிலிருந்து அவர்கள் கடந்திருக்கிறார்கள். "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்." (ரோமர் 6:23) ஆகையால் இந்த கிருபையை ஏற்றுக்கொண்டவர்கள் இந்த நிலைமையில் இருக்கிறார்கள். மனுக்குலத்தில் மீதியானவர்கள் தேவ கோபத்தில், மரண தண்டனையின் கீழாக இருக்கிறார்கள். அவர்கள் நித்திய ஆக்கினையின் தண்டனையின் கீழாக இல்லை. ஆனால் சாபத்தில் மரண தண்டடைனயில் இருக்கிறார்கள். அனைத்து மனுக்குலமும் இந்த தண்டனையின் கீழாக பிறந்திருக்கிறர்கள். ஆகையால் அப்போஸ்தலர் மறுபடியும் கூறுகிறதாவது: "நாம் உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்பியிருக்கிறோம்." (2 பேதுரு 1:4) அது இன்னும் உலகத்தின் மேல் இருககிறது. நாம் விடுதலையடைந்திருக்கிறோம்.

## புதிய உடன்படிக்கை இஸ்ரயேலரோடு செய்யப்பட வேண்டும்

எனினும் இந்த யுகத்திற்கும் அடுத்த யுகத்திற்கும் வித்தியாசம் உண்டு. உலகமானது சோதனைக்குள் வைக்கப்படும் முன்பு, தலையாகிய கிறிஸ்துவும் அதன் சரீரமாகிய சபையும் சேர்ந்த மத்தியஸ்தரை பெற்றிருக்கும். இந்த மத்தியஸ்தர் தெய்வீக நீதிக்கும் திரளான மனுக்குலத்திற்கும் இடையே நிற்பார். மத்தியஸ்தர் செய்யும் முதலாவது வேலை புது உடன்படிக்கையை அமலுக்கு கொண்டு வருவதாகும். எரேமியா தீர்க்கதரிசி புதிய உடன்படிக்கை இஸ்ரயேலுடன் ஆரம்பிக்கப்படும் என்று கூறுகிறார். (எரேமியா 31:31) "இதோ, நாட்கள் வருமேன்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்." மேசியா அந்த புது உடனபடிக்கையின் மத்தியஸ்தராக இருப்பார். மோசே இந்த மாபெரும் மத்தியஸ்தருக்கு முன்னடையாளமாக இருக்கிறார். நியாயப்பிரமாணம் இந்த புதிய உடன்படிக்கைக்கு முன்னடையாளம். யூதர்கள் அனைவரும் மோசேயிடமிருந்து மேலான மத்தியஸ்தராகிய கிறிஸ்துவுக்கு மாற்றப்படுவார்கள்; பழைய நியாயப்பிரமாணத்திலிருந்து புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மாற்றப்படுவார்கள்.

அவர்கள் தங்கள் தேவையை உணர வருவதால், புது உடன்படிக்கை அனைவருக்கும் திறந்திருக்கும். அவர்களுக்கு தேவையானதெல்லம் மத்தியஸ்தர் மூலமாக நிறைவேற்றப்படும். அந்த காலத்தின் ஆசீர்வாதங்களில் யூதர்களுடன் பங்குபெற அனைவரும் மேசியாவின் ராஜ்யத்தின் ஏற்பாடுகளுக்கு கீழ் வரவேண்டும். நாம் வாசிப்பதாவது: "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து, நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்கும் போதிப்பார். நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும் எருலேமிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."(ஏசாயா 2:3; மீகா 4:2) அவர் யூதருக்கு முதலில் செய்துவிட்டு பிறகு நமக்கும் செய்வார் என்று அவர்கள் சொல்வார்கள்.

## "அவர் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன் என்று அழைக்கப்படுவார்"

இப்படியாக கர்த்தருடைய ஆசீர்வாதம் ஒரு தேசத்திலிருந்து மற்ற தேசத்துக்கும் முழு உலகத்துக்கும் விரிவுபடுத்தப்படும். இப்படியாக பூமியிலுள்ள சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும். எனினும் புதிய உடன்படிக்கையின் ஏற்பாடுகள், மனுக்குலம்

மத்தியஸ்தரை ஏற்றுக்கொள்ளும் அளவுக்குத்தக்கதாகவே ஆசீர்வாதத்தை கொண்டு வரும். அவர்கள் புது உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணக்கமாக வருவதால் ஆயிர வருட யுகம் முழுவதும் அவர்களது மனக்கண்கள் திறக்கப்படும். இப்படியாக அடுத்த யுகத்தில் மாபெரும் ஜீவனை அளிப்பவர் மூலமாக ஜீவனைப் பெற்றுவதற்கும் தற்போது ஜீவனை பெறுவதற்கும் வித்தியாசம் இருக்கும். ஆயிரம் வருட யுகம் முழுவதும், புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக கிறிஸ்து ஆளுகை செய்யும் மகிமையான ஆளுகையில், இஸ்ரயேலையும் உலகத்தையும் அபிவிருத்தி செய்து, அவர்களது விழுந்து போன நிலைமையிலிருந்து பூரணத்திற்கு கொண்டு வரப்படும்.

தீர்க்கதரிசி ஏசாயா கூறுவது போல, "அவர் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு" என்று அழைக்கப்படுவார். (ஏசாயா 9:6) ஆகையால் மாபெரும் மத்தியஸ்தர் மற்றும் சகல ஜனங்களுக்கும் இடையே இருக்கும் உறவு பிதா மற்றும் அவரது பிள்ளைகள் என்கிற அளவுக்கு இருக்கும். நித்திய ஜீவனை விரும்புகிறவர்களுக்கு அளிக்கும் காலமாக கிறிஸ்து ஆளுகை செய்யும் காலம் இருக்கும். நித்திய ஜீவனுக்கு வரும்படி ஒவ்வொரு ஜீவிக்கும் முழுமையான சந்தர்ப்பமும் முழுமையான சோதனையும் கொடுக்கப்படும். ஆயிரம் வருட யுகத்தின் முடிவில் மனுக்குலம் அனைத்தும் கடைசியாக சோதிக்கப்படுவதற்கு தேவனிடம் அனுப்பப்படுவார்கள்.

எனினும் சபைக்கும் கிறிஸ்துவுக்கும் இடையேயுள்ள உறவு வித்தியாசமானது. அவர் நமக்கு பிதா இல்லை. அவர் நமது சகோதரர். அவர் நமக்கு பரிகாரி; அவர் மூலம் தான் நாம் பிதாவானவரிடம் செல்ல முடியும்; அவர் மூலம் தான் நாம் பிதாவானவரை அப்பா, பிதாவே என்று கூப்பிட முடியும்.

நமது வசனம் இப்பொழுதுதான் சரியானபடி பயன்படுத்தப்படுகிறது. மனிதர்கள் சத்திய அறிவுக்கு வருவதால் ஆயிரம் வருட யுகத்தில் இது படிப்படியாக பயன்படுத்தப்படும். யூதர்கள் ஒரு ஜாதியாக நியாயப்பிரமாண உடன்படிக்கையிலிருந்து புது உடன்படிக்கைக்கு மாற்றப்படுவார்கள். ஏற்ற காலத்தில் அவர்கள் மாற்றம் அடையும்படி தேவன் அவர்களை உடன்படிக்கைக்கு கீழாக வைத்தார். ஆனால் மற்ற ஜனங்களைப் போல மாபெரும் மத்தியஸ்தரை ஏற்றுக்கொள்ள கடமைப்பட்டிருப்பார்கள். அந்த கணத்திலிருந்து புது உடன்படிக்கை அவர்களை மூடும்படியான ஏற்பாட்டின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள். தேவனுடைய ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மேல் தேவ கோபம் இன்னும் இருக்கும்.